# பொதுக்காலம் 19ஆம் வாரம் - ஞாயிறு

## இரண்டாம் ஆண்டு

### திருப்பலி முன்னுரை

இறைஇயேசுவில் அன்பிற்குரியவர்களே, இன்று பொதுக்காலம் 19ம் ஞாயிறு வழிபாட்டை சிறப்பிக்க வந்துள்ள உங்கள் அனைவருக்கும் இயேசுவின் இனிய நாமத்தில் அன்பான வணக்கங்கள்.

இன்றைய நற்செய்தியில், இயேசு, “என்னிடம் நம்பிக்கை கொள்வோர் நிலைவாழ்வைக் கொண்டுள்ளனர்” என்று கூறுவதைக் காண்கின்றோம். அத்தகைய நிலைவாழ்வைப் நாம் பெற வேண்டுமெனில், முதலாவதாக, அவரிலே நம்பிக்கை கொள்ள வேண்டும். தம்மையே தாழ்த்தி, இவ்வுலகில் நமக்காக, மனிதராகப் பிறந்து, வாழ்ந்து, மரித்து. உயிர்த்த அவரிலே நம் நம்பிக்கை பாறைமீது கட்டப்பட்ட வீட்டைப் போல உறுதியாக இருக்க வேண்டும். பன்னிரு ஆண்டுகளாக பெரும்பாட்டினால் துயருற்ற பெண், அவரது ஆடையைத் தொட்டாலே நலம் பெறுவேன் என்று கூறிய அத்தகைய நம்பிக்கை நமதாக வேண்டும். “அவர் என் இல்லத்தில் வர நான் தகுதியற்றவன், ஒரு வார்த்தை சொன்னால் போதும், என் ஊழியன் நலமடைவான்” என்று கூறிய அந்த நூற்றுவர் தலைவனின் நம்பிக்கை நமதாக வேண்டும். எத்தகைய நிலை நம் வாழ்வில் வந்தாலும் அவரிலே நம் நம்பிக்கை குன்றாதிருக்க வேண்டும்.

இரண்டாவதாக, நிலைவாழ்வு பெற நாம் செய்ய வேண்டியது, நிலைவாழ்வு தருகின்ற அவரின் வார்த்தைகளை நாம் வாழ்வாக்க வேண்டும். அவரின் வார்த்தைகள் நம்மிலே, வழியோரம் விழுந்த விதையாக இல்லாமல், பாறை மீது விழுந்த விதையாக இல்லாமல், நல்ல நிலத்தில் விதைபோல முப்பது, அறுபது, நூறு மடங்கு பலன் தருகின்றனவாக இருக்க வேண்டும். பணக்கார இளைஞன், நிலைவாழ்வு பெற என்ன செய்ய வேண்டும்” என இயேசுவிடம் கேட்டபோது, கட்டளைகளைக் கடைப்பிடி” என்றார், அவற்றையெல்லாம் கடைப்பிடிக்கிறேன் என்று கூறியவனிடம், அப்படியானால் உன் உடைமைகளை விற்று ஏழைகளுக்குக் கொடு” என்று சொன்னபோது, அதை செயல்படுத்த மனமற்றவனாக சென்றதை, விவிலியத்தில் நாம் காண்கின்றோம். நாமும் அந்த இளைஞனைப் போல் எதையும் இழக்க, கொடுக்க மனமற்றவர்களாக வாழாமல், அவரிலே நாம் கொண்டுள்ள நம்பிக்கையை, அவரின் வார்த்தைகளை வாசிப்பதோடு மட்டுமல்லாது, வார்த்தைகளை, நல்ல சமாரியனைப் போல, நம் செயல்களிலே வெளிப்படுத்த வேண்டும். அப்போதுதான் நிலைவாழ்வை நாம் பெற முடியும். அதற்கான அருள் வேண்டி, இத்தெய்வீகத் திருப்பலியில் நம்மை அர்ப்பணிப்போம்.

### முதல் வாசக முன்னுரை: 1 அரசர்கள் 19:4-8

நிலைவாழ்வுக்குரியவர்களே,

இன்றைய முதல் வாசகம், எலியாவின் பாலைநில அனுபவத்தைப் பற்றி எடுத்துரைக்கிறது. தனக்கு நேர்ந்த துன்பங்களால் துவண்ட எலியா, தன் உயிரை எடுத்துக் கொள்ளுமாறு ஆண்டவரிடம் மன்றாடுகிறார். ஆண்டவரோ வானதூதர் வழியாக அவருக்கு அப்பமும் தண்ணீரும் அனுப்புகிறார். அந்த உணவால் வலிமை

பெற்ற எலியா, நாற்பது நாட்கள் பாலைநிலத்தில் நடந்து கடவுளின் மலையை அடைந்தார் என்பதைக் காண்கிறோம். எலியாவைப் போல கடவுள் தரும் உணவால் வலிமை பெற வரம் வேண்டி, இந்த வாசகத் துக்கு செவிமடுப்போம்.

**இரண்டாம் வாசக முன்னுரை: எபேசியர் 4:30-5:2**

நிலைவாழ்வுக்குரியவர்களே, இன்றைய இரண்டாம் வாசகத்தில் திருத்தூதர் பவுல், மனக்கசப்பு, சீற்றம், சினம், கூச்சல், பழிச்சொல் போன்ற தீமைகள் அனைத்தையும் நம்மை விட்டு நீக்குமாறு அழைப்பு விடுக்கிறார். கிறிஸ்து வழியாக தந்தையாம் கடவுள் நம்மை மன்னித்தது போன்று, நாமும் ஒருவரை ஒருவர் மன்னித்து அன்புசெய்து வாழ அழைக்கப்படுகிறோம். கிறிஸ்துவின் பலியால் தூயோராக்கப்பட்டிருக்கும் நாம், கடவுளின் அன்பு பிள்ளைகளாய் மாறும் வரம் வேண்டி, இந்த வாசகத்துக்கு செவிமடுப்போம்.

**மன்றாட்டுக்கள்:**

***பதில்: எல்லாம் வல்ல இறைவா, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.***

"ஆண்டவரையே நம்பியிருப்பவர் நலமுடன் வாழ்வர்" என்ற இறைவா,

எங்கள் வாழ்வில் நிகழும் இன்ப, துன்பங்கள் அனைத்திலும், உம்மை விட்டு விலகாமல், உம்மை பழித்துரைக்காமல், உம்மை மறுதலிக்காமல் வாழ்ந்திடக் கூடிய நல் இதயத்தைத் தந்தருளும். உம் கரங்களிலிருந்து நல்லதைப் பெற்ற நாங்கள், யோபுவைப் போல, அனைத்தையும் இழக்க நேரிட்டாலும், அந்த நிலையிலும் உம்மிலே நம்பிக்கையுள்ளவர்களாக, நடப்பவை எல்லாம் நன்மைக்கே என்ற உண்மையான விசுவாச மனநிலையுள்ளவர்களாக, எங்கள் வாழ்வில் பயணப்பட, உமதருளைப் பொழிந்திட வேண்டுமென்று, இறைவா, உம்மை மன்றாடுகின்றோம்.

"திராட்சை இரசம் ஒழுங்கீனத்தைத் தோற்றுவிக்கும்: போதை தரும் குடி அமளியைத் தோற்றுவிக்கும்" என்ற இறைவா,

மது, போதைப்பழக்கம் என்ற சாத்தானின் மாய வலையில் பல ஆண்கள், பெண்கள், சிறுவயதினர் வீழ்ந்து கிடக்கின்றனர். தங்களின் வளமான, எதிர்கால வாழ்வை மறந்தவர்களாக, அந்த இருளின் வழியில் தங்கள் வாழ்வை தொலைத்துக் கொண்டிருக்கின்றனர். இதனால், பல குடும்பங்கள் சீரழிந்து, வாழ்விழந்து, வாழ்வை முடித்துக் கொள்ளும் கொடூரமான அவலநிலையும் அரங்கேறி வருகின்றது. இத்தகைய தவறான பாதையிலிருந்து அவர்கள் அனைவரையும் விடுவித்து, தங்கள் வாழ்வை சீரமைத்து, நேரிய வழியில் வாழ்ந்திட, ஒளியின் பாதையில் பயணப்பட, உமதருள் வேண்டி, இறைவா, உம்மை மன்றாடுகின்றோம்.

"தந்தையைக் கொடுமைப்படுத்தித், தாயைக் துரத்திவிடும் மகன், வெட்கக்கேட்டையும், இழிவையும் வருவித்துக் கொள்வான்" என்ற இறைவா,

தங்கள் பிள்ளைகளின் வாழ்வு வளமாக, நலமாக, மகிழ்வாக அமைய வேண்டுமென்பதற்காக, பெற்றோர்கள் தங்கள் உடல்நலம், தூக்கம், கஷ்டங்கள் அனைத்தையும் செய்து, தனக்கென எதுவுமில்லாது அனைத்தையும் துறந்து வாழும் அவர்களை, பிள்ளைகள் இன்று மதிக்காது, அவர்களை நேசிக்க மனமும், நேரமும் இல்லாது, அவர்களை தங்கள் தாய், தந்தை எனச் சொல்லக்கூட வெட்கப்பட்டு, அவமதித்து, அவர்களை புறக்கணித்து, முதியோர் இல்லங்களில் சேர்த்து வரும் மோசமான நிலையை மாற்றியருளும். இன்று அவர்களுக்கு, நாளை நமக்கு" என்பதை உணர்ந்தவர்களாக, பெற்றவர்களை நேசித்து வாழ்ந்திடக் கூடிய நல்இதயத்தைத் தந்தருள வேண்டுமென்று, இறைவா, உம்மை மன்றாடுகின்றோம்.

"உன்னால் முடிந்தவரை அடுத்தவருக்கு உதவு" என்ற இறைவா,

எங்கள் வாழ்வில் பணம், பொருள் அனைத்தையும் நாங்களே அனுபவிக்க வேண்டுமென்ற பேராசை நிறைந்த தன்னலம் நிறைந்த இதயத்தை அகற்றி, பொதுநல நோக்குடன், தன்னிடம் இருந்த இரண்டு மீன்களையும் மனதார கொடுத்த அந்தச் சிறுவனைப் போல, நாங்களும் எங்களிடம் இருப்பதை, எங்களால் முடிந்தவரை, இல்லாதாவர்களோடு பகிர்ந்து கொடுக்கவும், கொடுப்பதை மனதார, முகமலர்ச்சியுடன் கொடுத்து உதவவும் கூடிய, பரந்த, தாராள இதயத்தைத் தந்தருள வேண்டுமென்று, இறைவா, உம்மை மன்றாடுகின்றோம்.

"நாவால் தவறாதபடி எச்சரிக்கையாய் இரு" என்ற இறைவா,

உடலில் மிகச் சிறிய உறுப்பானது நாவே, கடவுளைப் போற்றுவதும் நாவுதான், கடவுளின் சாயலாக படைக்கப்பட்ட மனிதனை தூற்றுவதும் நாவுதான். மனிதனால் அடக்க இயலாத ஒன்றும் நாவுதான். பலரை பாராட்டுவதை விட, ஊக்கப்படுத்தும் வார்த்தைகளை, ஆறுதலான வார்த்தைகளை, மகிழ்ச்சி நிறைந்த வார்த்தைகளை கூறுவதை விட, மனிதர்களை கடுமையான வார்த்தைகளால் விமர்சிப்பதும், அவமானப்படுத்துவதும் இந்த நாவுதான் என்பதை உணர்ந்து, நாங்கள் நாவினால் எந்த பாவத்திலும் விழாமல், எந்த இடத்தில் என்ன பேச வேண்டுமென்பதை உணர்த்திடவும், உம் தூய ஆவியின் வரங்களைப் பொழிந்திட வேண்டுமென்று, இறைவா, உம்மை மன்றாடுகின்றோம்.

Rev. Fr. Amirtha Raj Sundar J., amirsundar@gmail.com; + 91 944 314 0660; www.arulvakku.com